II.—CALLING ATTENTION TO CLASH BETWEEN STUDENTS OF GOVERNMENT ARTS COLLEGE IN VRIDHACHALAM TOWN AND CERTAIN MEMBERS OF THE GENERAL PUBLIC BETWEEN 26TH AND 28TH FEBRUARY 1969.

THIRU A. R. DAMODARAN : Sir, I desired to raise this on the 27th February and at that time, it was a matter of urgent public importance. It has become infructuous now and therefore, I do not desire to do so.

III. ELECTION OF DEPUTY CHAIRMAN.

MR. CHAIRMAN : We proceed to the next item of business, namely, election of the Deputy Chairman. Under Article 182 of our Constitution and under sub-rule (4) of rule 13 of the Tamil Nadu Legislative Council Rules, I have to read out to the House the names of the Members who have been duly nominated for Deputy Chairmanship together with those of the proposers and seconders. They are as follows :—

Member nominated.	Proposer.	Seconder.
1. Thiru G. Krishnamoorthy.	Thiru A. R. Damodaran.	Thiru G. Swaminathan.
2. Thiru G. Krishnamoorthy.	Thiru A. R. Damodaran.	Thiru D. Santosham.
3. Thiru Wilson Appollos.	Thiru N. R. Thiagarajan.	Thiru R. Krishnaswamy Naidu.
4. Thiru Wilson Appollos.	Thiru A. Ponnappa Naidu.	Thirumathi Saraswathi Pandurangam.

As more than one Member has been duly nominated, the Council will now proceed to elect the Deputy Chairman by ballot, as prescribed in sub-rules (4) to (8) of rule 13 of the Council Rules.

Two cubicles, one on the western side and another on the eastern side of the Chairman, have been provided to enable the hon. Members to record their votes.

I have directed the Secretary to the Council to call the Members, one from each side, and as they approach him, each will be handed a ballot paper. After getting his ballot paper, each Member is requested to go into one of the cubicles, record his vote and deposit the ballot paper in the ballot box provided for the purpose on the Secretary's Table.

To keep order in the House and to avoid the suggestion that canvassing is going on within the House, hon. Members are requested to remain in their places and to go to the Secretary's table as they are called. Hon. Members are also requested to avoid talking either before or after voting and to maintain the secrecy of ballot.

THIRU SAW GANESAN : I request you, Sir, to instruct the hon. Members to mark "X" or "L" or "O" against the name of the Member for whom they wish to vote. That is better.

MR. CHAIRMAN : This is the ballot paper. The first name is Thiru G. Krishnamoorthy.

26th March 1969] [Mr. Chairman]

தமிழில் சொல்வது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். இருந்தாலும் பரவாயில்லை. சொல்கிறேன். (வாக்குச் சீட்டை மன்றத்தில் காண்பித்து) இதுதான் **Ballot paper** இதிலே நடுவில் காக்காப் புள்ளி என்று சொல்வார்களே அது இருக்கிறது. மத்தியில் தான் * மார்க் மாதிரி போட வேண்டும். இரண்டும் கெட்டானாகப் போட்டால் கெட்டுப் போய் விடும். அப்படிப் போடக்கூடாது. நம் மன்றத்தில் **Invalid vote** என்பது இருக்கக்கூடாது. மேலும் "X" மார்க் செய்வதற்கு பேனா வைக்கவில்லை. பேனாவினால் மார்க் செய்தால் **Ballot paper**-ஐ மடிக்கும் போது, மார்க் இரு பக்கங்களிலும் ஒட்டி விழுந்துவிடும். பிறகு தகராறுக்கு இடம் கொடுக்கும். அதனால் பென்சில் வைக்கப்பட்டிருக்கிறது. பென்சிலாலேயே மார்க் செய்யவேண்டும்.

திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, அத்துடன் அந்தத் தாளில் கையெழுத்தோ மற்ற வாசகங்களோ எதுவும் இருக்கக் கூடாது என்றும் தாங்கள் சொல்லவேண்டும்.

மிஸ்டர் சேர்மன்: ஆமாம் அதையும் சொல்கிறேன். அந்தத் தாளில் யாரும் எதையும் எழுதவேண்டாம். சில இடங்களில் என்னென்னமோ அதிலே எழுதுகிறார்கள். அதெல்லாம் நமக்குவேண்டாம் (சிரிப்பு).

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, "X" என்று தான் போட வேண்டுமா? சைபர் போடக்கூடாதா ?

மிஸ்டர் சேர்மன்: சைபர் போட்டால் ஓட்டும் சைபர் தான் (சிரிப்பு).

(Voting then took place. The Secretary to the Council called out the names of Members from his seat and as each Member's name was called, the Member came to the Secretary and took a ballot paper. He then went into one of the cubicles provided on the eastern and the western sides of the Chairman and after recording his vote deposited the voting paper in the ballot box placed on the Secretary's table and resumed his seat.)

3-30 p.m.

MR. CHAIRMAN: Before I appoint the Tellers I wish to know whether there are any Members who have not been called and who have not voted. If there are any, they may now exercise their vote.

(The Secretary to the Council then read out the names of the absentees, namely: Thiruvalargal O. P. Ramaswamy Reddiar, S. T. Adityan, T. K. Ponnuvelu, G. R. Damodaran, D. Santosham and M. Sivasubramania Pandiyan.)

MR. CHAIRMAN: Under Article 189 of the Constitution all questions at any sitting of a House of the Legislature of a State shall be determined by a majority of the votes of Members present and voting other than the Speaker or Chairman or the person acting as such. The tradition has been that the Chair being above party refrains from voting.

Now before the counting of votes begins, I appoint Thiruvalargal N. V. Natarajan and T. K. Subbiah as Tellers.

(When the counting was over, the two Tellers attested the result of the voting and handed over the paper to the Hon. Chairman.)

[26th March 1969

Mr. Chairman : The result of the voting is—

Number of votes secured by Thiru G. Krishnamoorthy—29.
Number of votes secured by Thiru Wilson Appolios—26.
Invalid votes—Nil.

Therefore I declare Thiru G. Krishnamoorthy as duly elected (Cheers) as he has got a larger number of votes than Thiru Wilson Appollos.

Now, I congratulate the winning candidate, Thiru G. Krishnamoorthy. The change is only that from a talking place he goes to a non-talking place (Cheers). I congratulate him.

It is customary for the losing candidate to congratulate the successful candidate. Then others may speak.

Thiru Wilson Appollos : Mr. Chairman, Sir, I congratulate the hon. Member Thiru G. Krishnamoorthy on his success and election as the Deputy Chairman of this House.

Mr. Chairman : Now other hon. Members may speak. The Hon. the Leader of the House and the Leader of the Opposition may speak at the beginning or at the end as they like.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் இந்த அவையினுடைய துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் இந்த மன்றத்தில் ஆசிரியர்களுக்காக நிரம்ப வாதாடி இந்த மன்றத்து உறுப்பினர்களுடைய உள்ளத்தில் தனக்கென ஒரு இடத்தை பதித்துக்கொண்டவர்கள் ஆவார்கள். நல்ல துடிதுடிப்பான முறையில் அவர்கள் இங்கு வாதங்களை நிகழ்த்து

4-00 p.m. கின்ற நேரத்திலும், நல்ல கருத்துக்களை எடுத்துக்கூறும் நேரத்திலும், இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கத்தக்க அளவு ஆற்றல் வாய்ந்தவராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மிகப் பொறுப்புவாய்ந்த இந்தப் பதவியில், மிகப் பொறுப்போடு தான் ஆற்றி வருகின்ற அந்தப் பணிக்குத் துணையாக இருப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கையோடு நான் அவரை என்னுடைய கட்சியின் சார்பாகவும் இந்த மன்றத்தின் சார்பாகவும் பாராட்டி அவர்களுடைய வெற்றிக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து இந்த அளவோடு அமர்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் இந்த மாமன்றத்தின் உபதலைவராக தேர்ந்தெடுத்தது கண்டு பாராட்டுகிறேன். அவரைச் சென்ற 20 ஆண்டு காலமாக நான் அறிவேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை என் தலைமையில் மதுரையில் நடந்த ஒரு ஆசிரியர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். இந்த ஜில்லா போர்டு வருமானம் அத்தனையையும் அவர் "ஆசிரியர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்துவிடுங்கள்" என்று சொன்னார். "அப்படிச் செய்தால் ஆசிரியர்கள் ரோடு போடக் கற்றுக் கொடுப்பார்கள். சுத்தம் சுகாதாரம் பற்றி மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பார்கள். ஆகவே, நீங்கள் ஆஸ்பத்திரி கட்ட வேண்டியதில்லை ; ரோடு போட வேண்டியதில்லை. ஆசிரியர்களுக்கு பணம் கொடுத்துவிட்டால் அவர்கள் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இவற்றைக் கற்றுக் கொடுத்து விடுவார்கள்" என்று கூறினார்கள். ஆகவே, அவருக்கு ஆசிரியர்கள் பால் உள்ள அன்பு பிணைப்பு காரணமாக அவர்களுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆசிரியர்களுக்காக எப்போதும் அவர் இருந்து கொண்டிருக்கிறார். ஆகவே அவரை இந்த மாமன்றம் உபதலைவராக தேர்ந்தெடுத்திருப்பது ஆசிரியர் உலகம் சந்தோஷப் படத்தக்க செய்தியாகும் என்று கூறி, நான் சர்க்கார் கட்சித் தலைவருடன் சேர்ந்து அவரைப் பாராட்டுகிறேன்.

26th March 1969]

DR. A. LAKSHMANASWAMI MUDALIAR: Mr. Chairman, Sir, as one who has moved with the hon. Member Thiru G. Krishnamoorthy for the last seventeen years ever since he came into this Council, may I add my tribute of praise to all his excellent qualities? He is a doughty fighter for the cause of teachers and their just aspirations. Mr. Krishnamoorthy is well known to all educationists. I sincerely feel grateful to this House that after all, a member of the teaching profession has been recognised and called upon to occupy the distinguished position of the Deputy Chairman of this House. I hope that this is only a precursor to future events. I should like to say I am not asking anything for myself. I have finished. But I do feel that teachers can play an important part as Mr. Krishnamoorthy has played. I do hope that with your help and advice he will certainly conduct himself with fairness, justice, and equality to all concerned. I wish him a very nice and pleasant time of office as Deputy Chairman.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, இந்த மன்றத்தின் துணைத் தலைவராக திருவாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காக நான் எனது கட்சியின் சார்பாகவும் மன்றத்தின் உறுப்பினர்கள் சார்பாகவும் என்னுடைய மகிழ்ச்சியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளும் முறையில், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தேர்ந்து எடுத்ததன் மூலமாக ஆளும் கட்சியினர் எவ்வித குல வேறுபாடும் அற்றவர்கள் என்பதை மிக நன்கு புலப்படுத்திக் கொண்டு விட்டார்கள், என்று நான் இப்போது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளும் கட்சி வேறு எதையும் கவனிக்காமல், ஆளை, தரத்தை கவனித்து ஆதரவு கொடுக்கிறது என்பதற்கு இது ஒரு நல்ல சான்று. இத்தகைய சூழ்நிலை வளர, வளர்ந்து இருக்க, ஆளும் கட்சியும், மன்றத்தில் உள்ள நாம் எல்லோரும் அதற்கு உதவி செய்யவேண்டுமென்று என்னுடைய கருத்தை புலப்படுத்திக்கொண்டு, 1952-ஆம் ஆண்டிலிருந்து இம்மன்றத்தின் செயல்களில் முழுக்க முழுக்க, நிறைய பங்கு கொண்டு உழைத்த, ஆசிரியத்துறையில் நின்ற, நிற்கிற, அவருக்கு நல்ல பணியும் நிதானமுமான செயலும் இம்மன்றத்தின் துணைத் தலைவராக விளங்குவதில் முழுக்க பிரதிபலிக்கும் என்று நம்பி, அவருடைய இந்த வாய்ப்பைக் கொடுத்த எல்லா அங்கத்தினர்களுக்கும் என்னுடைய பாராட்டையும் தெரிவித்து, அவருடைய பதவிக்காலம் சிறப்பாகவும் செழுமையாகவும் விளங்க ஆண்டவன் திருவருள் புரியவேண்டுமென்று வேண்டி அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்தின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக நான் பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திரு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து உளமார்ந்த மகிழ்ச்சி எனக்கு உண்டு. எல்லா வகையிலும் அந்த ஸ்தானத்திற்கு உரிய பொருத்தங்கள் அவரிடத்தில் நான் காண முடிகிறது. சுமார் 17 ஆண்டுகளாக இந்த மன்றத்தின் உறுப்பினராக அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அவருடைய அனுபவம், அவருடைய பொறுப்புகளை எந்த அளவிற்கு முறைப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த மன்றத்தின் உள்ள பேச்சாளர்கள் மட்டுமல்ல. கீழ்ச்சபை என்று சொல்லக்கூடிய மன்றத்தில் உள்ள பேச்சாளர்களையும் வைத்து யார் "வேகமாகப் பேசக் கூடியவர் "fast and fluent speaker" என்று போட்டி வைத்தால், நிச்சயமாக நமது கிருட்டிணமூர்த்தி அவர்கள் அதில் முதல் பரிசு பெறக் கூடியவர்கள். அவ்வளவு வேகமாகப் பேசும் ஆற்றல் படைத்தவர் அவர்கள். ஆங்கிலத்திலும், தமிழிலும் அவ்வளவு நல்ல பேச்சாளி இந்தச் சபையின் துணைத் தலைவராக அமைந்தது மிகவும் பொருத்தமான ஒரு அமைப்பு. அவ

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [26th March 1969

ருடைய எளிமையான உடையும் அடக்கமான போக்கும் உண்மையில் பாராட்டுக்குரியவை. ஒரு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் ஆசிரியர் தொகுதி தேர்தலில் நின்று தேர்தலுக்காக வேலை செய்யக் கரூர் வந்திருந்தார். அவரை நான் கரூர் பஸ் ஸ்டாண்டில் சந்தித்தேன். ஒரு கையில் பையும் மற்றொரு கையில் ஓட்டர் லிஸ்டையும் வைத்துக் கொண்டிருந்தார். " ஏனய்யா, இங்கு நிற்கிறீர் " என்று கேட்டேன். " **Vote canvassing** " க்காக வந்தேன் என்று சொன்னார். " பஸ்ஸிலேயே ஊர் ஊராகச் சென்று எவ்வளவு பேர்களைப் பார்ப்பீர்கள் " என்று கேட்டேன். " வேறு வகையில்லை, ஆகவே ஒவ்வொரு ஊருக்கும் பஸ்ஸிலே சென்று " ஓட்டு கேட்கிறேன் " என்று சொன்னார். அவ்வளவு எளிமையான முறையில் தேர்தல் நடத்தி வெற்றி பெற்ற உரிமை அவருக்கு உண்டு. மக்கள் அவருடைய பொருத்தத்தை, சேவையை மதித்து அவருக்கு ஆதரவு கொடுத்து, அவர் வெற்றி பெற்றார்கள். உண்மையான ஊழியர், ஆசிரியர்களுக்காகப் பாடுபடக் கூடியவர், இந்த மன்றத்தின் உபதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதற்கு என் சார்பிலும் பாராட்டு தெரிவித்து வாழ்த்தி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்களுடைய ஆசிரியர் சமுதாயத்தைச் சேர்ந்த, ஒரு பெருமகனார் இந்த மாமன்றத்தினுடைய துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது இந்த சமுதாயத்திற்கு கிடைத்திருக்கக் கூடிய ஒரு பெரும் வாய்ப்பாகும். கடந்த 17 ஆண்டு காலமாக இந்த மாமன்றத்தில் அவர் ஆசிரியர் சமுதாயத்தினுடைய பிரச்சினைகளுக்காக வாதாடிய ஒரு சிறந்த உழைப்பாளி ஆவார்கள்.

" சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து "

என்ற வள்ளுவன் வாக்குப்படி, நம்முடைய முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள், மிக வேகமாக பேசக் கூடிய ஒருவர், அவர் எவ்வளவு வேகமாகப் பேசினாலும், நிதானம் தவறாமல் பேசக் கூடிய ஒருவராகக் கடந்த 17 ஆண்டு காலமாக அவர் இருந்திருக்கிறார் என்பதைப் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒருவர் இந்த மாமன்றத்தினுடைய துணைத் தலைவராக வந்திருக்கிறார். பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியர் இல்லாத நேரத்தில், துணை ஆசிரியர் எப்படி அந்த பள்ளிக் கூடத்தை மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து அவருக்கு உறு துணையாக இருப்பார்களோ, அதுபோல சான்றோர்கள் கூடிய, இந்தப்பெரும் பள்ளிக்கு துணைத் தலைவராக வந்து, இந்தப்பெரும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பயிற்சி பெற்ற அவர்கள், இந்த மாமன்றத்தில் நிச்சயமாக எந்த நாளிலும் அவருடைய கடமையை நிறைவேற்றுவதில், தீர்ப்புகளை வழங்குவதில், மற்றவர்களுக்குப் பின்னாலே நிற்காமல் முன்னணியில் நின்று உதாரணமாகத் திகழ்வார்கள் என்று எடுத்துக் காட்டி, அமைச்சர் என்ற முறையில் அல்ல, தமிழக ஆசிரியப் பெருமக்கள் அத்தனை பேர்கள் சார்பிலும், என் இதயங்கனிந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்து, அவரை வாழ்த்தி, அவர் வாழ்க, வளர்க என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN : Thiru G. Swaminathan. The hon. Member will please be brief.

***திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து அமைச்சர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் பாராட்டினார்கள். திரு. கிருட்டிணமூர்த்தி அவர்களைப் பற்றி சொல்லுகிற போது விரைவான பேச்சாளர் என்று முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் நண்பர் திரு. வகாப் அவர்கள் குறிப்பிட்டார்கள். பேரவைக்கும் இந்த அவைக்கும் உள்ள ஒரிரு வித்தியாசங்களை நண்பர்கள் சொல்வதுண்டு. பேரவையில் எவ்வளவு நல்ல பேச்சாளராக இருந்தாலும், கூட 10 நிமிடங்களுக்கு மேல் இடம் கொடுப்பதில்லை. ஆனால் இந்த அவையில் அரை மணி

அல்லது முக்கால் மணி நேரம் பேசுவதற்கும் தலைவர் அவர்கள் அன்பு கூர்ந்து காலத்தைக் கொடுப்பார்கள் என்று, நான் மேல் சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தபோது பாராட்டு தெரிவித்து நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

மிஸ்டர் சேர்மன்: இன்றைக்கு இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: கனம் தலைவர் அப்படிச் சொல்லக்கூடாது என்பதற்காகத் தான் முன்னேடியாக இதைச் சொன்னேன். இருந்தாலும் கூட உங்களுடைய Time limit -க்குள் என் பேச்சை முடிக்கிறேன். இந்த மேலவையில் கிடைக்கிற 30, 40 நிமிடங்களிலே அதிகப்படியான விஷயங்களை, ஆங்கிலத்தில் Compressed என்று சொல்லுவார்கள், அப்படி எல்லா விஷயங்களையும் மிக விரைவாக பேசக்கூடிய நிலைமையில் திரு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் இங்கு பேசுவார்கள் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். திரு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் 17 ஆண்டு காலமாக இந்த அவையில் இருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அவருடைய பெயரை ஆமோதித்தவன் என்ற முறையிலும், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற முறையிலும் தஞ்சை-திருச்சி ஆசிரியர் தொகுதியிலிருந்து வந்தவர் என்ற முறையிலும், நானும் அதே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்றமுறையிலும், என்னுடைய தேர்தலின் போது அவருடைய ஒரு பேராதரவைப் பெற்று நான் வெற்றி பெற்றேன் என்ற முறையிலும் நான் அவரை வாழ்த்துகிறேன். தேர்தலின் போது பல ஆசிரியர்களை நான் அணுகுகிற போது அவர்கள் சொன்னார்கள். திரு. கிருட்டிணமூர்த்தி உங்களை ஆதரிப்பதாகச் சொன்னல், கடவுள் எப்படி ஒருவரை ஆதரிக்கச் சொன்னல், அவருக்கு எப்படி ஓட்டு போடுவோமோ அப்படி திரு. கிருட்டிணமூர்த்தி அவர்களைக் கடவுள் போல நாங்கள் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள்." திரு. கிருட்டிணமூர்த்தி, பஸ்ஸில் போய் தேர்தல் பிரச்சாரம் நடத்தினர் என்று மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. வகாப் அவர்கள் சொன்னார்கள். அவருக்கு தேர்தல் வேலை செய்தவர்களும் நடையாக நடந்து ஒவ்வொரு வீடாகச் சென்று ஓட்டர்களையும் கால் நடையாகவே அழைத்து வந்து Polling செய்த முறை ஒரு அழகு. எல்லா அங்கத்தினர்களும் அது மாதிரி செய்ய வேண்டுமென்பது தான் சம்பிரதாயம். அதையே சரியான முறையில் நாணயமான முறையில், அங்கத்தினர் யாராவது ஒருவர் செய்திருக்கிறார் என்றல் அது திரு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் தான். அப்படிப்பட்ட ஒரு ஆசிரியர் இன்று துணைத்தலைவராக வந்திருக்கிறார்கள். பேரவையிலும் தலைவராக இருப்பவர் ஒரு ஆசிரியர். நம்முடைய மன்றத்தில் துணைத் தலைவராக வந்திருப்பவர்கள் ஆசிரியர். அமைச்சர் அவர்களும் "தான் ஆசிரியராக இருந்தவர்" என்று சொன்னர் ஆசிரியர்களுக்கு அனுதாபமும் அதிகாரமும் மேன்மேலும் வந்து கொண்டிருக்கிறது என்ற "அளவில் என்னுடைய சந்தோஷத்தைச் சொல்லி, திரு. கிருட்டின மூர்த்தியை வாழ்த்திப்பேச்சை முடிக்கிறேன்.

திரு. டி. கே. ஷண்முகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர் திரு. கிருட்டினமூர்த்தி அவர்கள் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு தமிழரசுக் கழகத்தின் சார்பில் என்னுடைய மனமுவந்த பாராட்டுகளை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மன்றத்தில் நான் வந்து சில நாட்கள் ஆனாலும் கூட, அவருடைய நாகரீகமான பண்புகளை மிக நன்றாக அறிந்திருக்கிறேன். அவர்கள் கேள்வி போடும் முறையும், கருத்துக்களை எடுத்துச் சொல்லும் முறையும், மிக நேர்மையாக விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத் துடிப்போடு அமைந்திருந்தன என்பதைப் பார்த்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். அத்தகைய நாகரீகமும் பண்பும் நிறைந்த அவர்கள் இந்த மன்றத்தின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது நம் எல்லோருக்கும் பெருமை தருவதாகும் என்ற முறையில் அவரை வாழ்த்தி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தச் சந்தோஷமான நேரத்தில் அதிகம் பேச முடியாது என்றல். முதல் முதலில்

1952-ல் நான் தேர்ந்து எடுக்கப்பட்டு இந்தச் சபைக்கு வந்தேன். அப்போது இந்தச் சபையில் ரொம்பப் பெரிய தலைவர்கள் எல்லாம் இருந்தார்கள். அவர்கள் மத்தியிலே நான் இருந்து கொண்டு இருந்தேன். என்னை விட எத்தனையோ மடங்கு பெரியவர்கள், பல தொழில் நிபுணர்கள், மற்றவர்கள் இந்தச் சபையில் என்னுடைய சாதாரண உழைப்பை மதித்து உப தலைவராக என்னைத் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். என்னைத் தேர்ந்து எடுத்ததற்காக அவர்களுக்கெல்லாம் என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல இந்த அரசாங்கம் உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கிறது. அரசு இப்படி எனக்கு மதிப்புக் கொடுப்பது ஆசிரியர்களுக்கு மதிப்புக் கொடுக்கிறது ஆகும் என்ற எண்ணம் இவ்வளவு தூரம் பரவி என்னை கௌரவித்து இருப்பதற்கு, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் சபைக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமருகிறேன்.

MR. CHAIRMAN : We will now take up the next item on the agenda.

IV. DISCUSSION ON THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1968–69.

4–20 p.m. * THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I rise to offer my remarks on the Final Supplementary Statement of Expenditure that has been placed before the House. I note, Sir, that under Grant XX, the Government have decided to undertake feasibility studies for facilitating the full utilization of raw materials that become available from the Manali Oil Refinery Project and the Neyveli Lignite Project. I am grateful to the Hon. the Finance Minister for having undertaken the study because as I have already stated when we were discussing the Budget, I believe there is great scope for the installation and starting of petro-chemical industries in the Manali Oil Refinery area. We face very stiff competition not only from the Koyali refinery area in Gujarat but also from the Baroni Oil Refinery area. It has always been accepted that when there is an oil refinery located near a port town, not only should we have projects for the manufacture of fertilizers but there are a host of medium scale industries which could be started in and around the oil refinery provided proper steps are taken to see that the basic industries are started.

Sir, I must also in this connection mention that these feasibility studies should be awarded with particular care to Engineer who are well trained and well experienced in our own State. Although I do not wish to cast any reflection on the firm of Engineers who have been entrusted with the task of conducting certain feasibility studies—I think the work has been entrusted to private Engineers of India Ltd.—I may, however, inform the Government of Madras that this very same firm has been asked to give feasibility studies in Koyali and therefore their recommendations have to be watched with particular care by the representatives of the Madras Government. I hope they will also consult local engineers who may have experience and knowledge of petro-chemical industries so that the recommendations of the other expert bodies may not give a decided slant which may make it difficult for the Madras Government to press its claims with the Government of India.